# கலைஞரும் நானும்

108

**“முத்தமிழறிஞர் கலைஞரை அருகிலிருந்து அண்ணாந்து பார்த்த ஒரு சில நிகழ்வுகள், எனக்குள்ளே இன்னமும் கவிதை பாடிக் கொண்டிருக்கின்றன” எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார், நாடகக் கலைஞர் முனைவர்.மு.இராமசுவாமி.**



# ‘யாரு... பெரியார் ராமசாமியா?’

**முனைவர் மு.இராமசுவாமி, நாடகக் கலைஞர் – நிஜ நாடக இயக்கம்**

*கலைஞர் மீதான பிரமிப்புகள் இன்னமும் விலகவில்லை. அவரின் எழுத்துகள், அவரின் எழுத்தில் உருவான திரைப்படங்கள். அவரின் உன்னதம் பேசும் **‘நினைவுச் சின்னங்கள்’**, **‘அண்ணா நினைவு நூற்றாண்டு நூலகம்’** உட்பட தமிழ்ச் சமூகத்திற்கு அவர் அளித்தவை எல்லாம் அவரின் உழைப்பை என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும். தமிழ்நாட்டை உயரத்தில் கொண்டு நிறுத்த, எல்லாத் திசைகளிலும், தன் கண்களையும் காதுகளையும் பொருத்தி வைத்திருந்தவர் கலைஞர்.*

*கலைஞர் குறித்து, அனைத்து மட்டங்களிலும் அறிந்திருந்தாலும், அவரை முதன்முதலில் அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்பு 1998-ஆம் ஆண்டு அமைந்தது. அப்போது, தமிழ்நாடு அரசின் சார்பில் கலை இலக்கியத்தை வளர்ப்பதற்காக **‘குறள் பீடம்’** என்கிற அமைப்பினை, அன்றைக்கு தமிழ்நாட்டு முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கி இருந்தார். அந்தக் குழுவில் நானும் ஓர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டிருந்தேன். அதற்கான கூட்டத்தில், அவருக்கு எதிரே அமர்ந்து என்னை அறிமுகப்படுத்திக் கொண்டதுடன், என் கருத்துகளையும் எடுத்துச் சொன்னேன். அவரின் கறுப்புக் கண்ணாடியை மீறி, அவர் மனசின் மெல்லிய அசைவுகளைப் புரிய முயன்றது, அன்று நாடகக்காரனான எனக்கு எளிய பயிற்சியாகவும் அமைந்தது. அந்த நினைவுகள் இன்னமும் பசுமையாக மனதுக்குள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆட்சிமாற்றம் காரணமாக, இரண்டு கூட்டங்களுக்குப் பின்னர், அந்தக் குழு தொடர்ச்சியாக இயங்கவில்லை.*

### ‘பெரியார்’ நாடகம் தந்த வாய்ப்பு

*அதன்பின், ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 2008-ஆம் ஆண்டில் அவர் கையால் விருது பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. **‘கலகக்காரர் தோழர் பெரியார்’** நாடகம் தமிழ்நாடு முழுவதும் பல மேடைகளில் நிகழ்த்தப்பட்டு, மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்தது. அந்தச் சூழ்நிலையில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சார்பில், 2008-ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்பட்டு வரும் **‘கலைஞர் பொற்கிழி விருது’**, தொடங்கிய முதல் ஆண்டிலேயே, நாடகத்திற்காக எனக்கு வழங்கப்பட்டது.*

*2007-ஆம் ஆண்டில் கலைஞர் வழங்கிய ஒரு கோடி ரூபாய் வைப்புத் தொகையில், அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி, அதிலிருந்து கிடைக்கும் வங்கி வட்டி வருமானம் மூலம், வருடம்தோறும் நான்கு தமிழ் எழுத்தாளர்கள், பிற இந்திய மொழி எழுத்தாளர் ஒருவர், ஆங்கில இலக்கிய எழுத்தாளர் ஒருவர் என ஆறு எழுத்தாளர்களுக்குத் தலா ஒரு லட்சம் வீதம் பொற்கிழியும் பாராட்டுச் சான்றிதழும் கொண்டது அந்த விருது.*

*‘கலகக்காரர் தோழர் பெரியார்’ நாடகத்தின் வழி, பகுத்தறிவு நாடகக்காரனாக, என்னை அவரிடம் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்கள் தேர்வாளர்கள். பட்டியல் கலைஞரின் பார்வைக்குப் போனபோது, என் பெயர் வருகையில், ‘யாரு... பெரியார் ராமசாமியா?’ என்று கேட்டதாக எனக்கு செவிவழிச் செய்தி வந்தது. ‘எந்த ராமசாமி?’ என்பதற்கான அவரின் எளிய அடையாளப்படுத்தல் அது.*



*அதிகம் தொடர்பில்லை என்றபோதும், அவர் மனதிற்குள் நானும் பெரியாரும் என் நாடகச் செயற்பாடுகளும் இருந்தன என்பது, இன்றைக்கு நினைத்தாலும் ஆச்சரியப்பட வைக்கிறது.*

*விருது விழாவில், நாங்கள் மேடையில் அமர்ந்திருக்கிறோம். அப்போது கலைஞர் சக்கர நாற்காலிக்கு மாறி இருந்த நேரம். மேடையில், என் பெயர் உச்சரிக்கப்பட்டபோது, நான் அவர் அருகில் வருகிறேன். அவரோ சக்கர நாற்காலியிலிருந்து எழுந்து, பொற்கிழிப் பெட்டியை அவர் கையால் வழங்கி, நீண்ட புகழாடையை என் கழுத்தினில் சார்த்தினார். அந்தக் கணம், என் கையும் தலையும் கவிழ்ந்து நிற்க, என் அனைத்து நாடியும் ஒரு நொடி அசைவற்று நின்றிருந்தது.*

*எப்பேர்ப்பட்ட பண்பாளர் அவர். மருத்துவர்கள், ‘நீண்டநேரம் நிற்கக்கூடாது’ என அறிவுறுத்தியிருந்தாலும், எழுத்தாளர்களுக்கு மதிப்பு செய்யும் நேரத்தில் தனது உடல்நலத்தை இரண்டாம் பட்சமாக்கிய , அந்தப் பண்பாளரின் பக்கத்தில் நிற்பதை மிகப் பெருமையாக உணர்ந்தேன். எனக்கு மட்டுமல்ல; விருது பெற்ற அனைவருக்கும் எழுந்து நின்றுதான் அளித்தார். அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பெரும் தகைமை அது.*

> **“ஒவ்வொரு நாள் பொழுதும் எத்தனையோ பெயர்களை நினைவுகளைக் கடக்கின்ற அவருக்கு, ‘ராமசாமி’ என்கிற பெயர் ஒருகணம் திரும்பிப் பார்க்க வைக்கும். அதில் பேராசிரியர் ராமசாமி என்கிறபோது, அது நானாக இருப்பேன் என்பதை அவர் அறிவார் அல்லவா? அதுவே நிறைவுதரும் பேறுதான்.”**

*அதன்பின்னர், 2008-ஆம் ஆண்டில் மற்றொரு நிகழ்வும் என்னை அவரின்பால் ஆட்கொண்ட நிகழ்வாக அமைந்தது. 2007-ஆம் ஆண்டிற்கான ‘கலைமாமணி விருது’, நாடக ஆசிரியர் என்பதற்காக எனக்கு வழங்கப்பட்டது. அந்த நிகழ்வின்போது, மேடையில் அன்றைய ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா நின்றுகொண்டு, விருதுப் பத்திரத்தை வழங்குகிறார். அருகில் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி, ஒவ்வொருவருக்கும் கழுத்தில் பதக்கத்தை மாட்டிக் கொண்டிருக்கிறார், முதல்வர் கலைஞர். என் கழுத்தில் கலைஞர் பதக்கத்தினை அணிவித்த போது, அவரின் கரத்தை வாஞ்சையுடன் பற்றி என் கண்களில் ஒற்றிக் கொண்டேன்.*

### மலர் பணி – மாநாட்டுப் பணி

*2009-ஆம் ஆண்டில், **‘அண்ணா நூற்றாண்டு விழா’** மலர்ப் பணி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களிடம் அளிக்கப்பட்டிருந்தது. ம.ரா அவர்கள், அந்தப் பணியில் என்னையும் ஈடுபடுத்தியிருந்தார். அந்த மலர் தயாரிப்பில், இரவு, பகல் என்றெதுவுமில்லாமல் ஈடுபட்டு, அதை மிகச் சிறப்பாக தயாரித்தோம். மலர் கண்களில் ஒற்றிக் கொள்ளும்படி வெளிவந்திருந்தது.*

*‘முதல்வருக்கு முழு திருப்தி’ என முனைவர். ம.ரா அவர்கள் சொன்னபோது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.*

*2010-ஆம் ஆண்டு, கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு ஆய்வரங்கப் பணிகள் எதிர்பார்த்தபடியே, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களின் தோள்களுக்கு வந்தன. அவருக்குத் தோள்கொடுத்து அலைந்து திரிந்தது மிகப்பெரிய அனுபவமாக அமைந்தது. மாநாட்டில் எனது **‘வலி அறுப்பு’** நாடகத்தை நிகழ்த்துவதற்கும் கலைஞர் அனுமதி வழங்கியது, வாழ்வின் மறக்கவியலாத பெருமையாகும்.*

*செம்மொழி மாநாட்டின்போது, **‘உலகத் தமிழ்ச் செம்மொழித் தொல்காப்பியர் பேரவை’** ஒன்றினை உருவாக்கினார் கலைஞர். அதன் தலைவராக கலைஞரும், ம.ரா அவர்கள் செயலாளராகவும் கொண்ட அந்தப் பேரவையின் இயக்குநராக என்னையும் நியமித்தார் கலைஞர். அரசு ஆணைக்கேற்ப ஓராண்டு காலம் அயற்பணி அடிப்படையில் ‘உலகத் தமிழ்ச் செம்மொழித் தொல்காப்பியர் பேரவை’யில் பணியாற்றினேன். அந்தப் பணிக்கு கலைஞர் என்னைத் தேர்வு செய்தது எனக்கு மிகப்பெரிய மனநிறைவை அளித்தது. கலைஞரின் சேமிப்பிற்குள் நானும் இருந்திருக்கிறேன் என்பது இன்றளவும் எனக்கு உச்ச மகிழ்ச்சியைத் தரவல்லது.*

*2016-ஆம் ஆண்டில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தேர்வுக் குழுவின் உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகினேன். அது தொடர்பாக பத்திரிகையாளர் சந்திப்பினை நிகழ்த்தியிருந்தேன். அந்த செய்தியாளர் சந்திப்பை ‘முரசொலி’யில் வெளியிட்டதுடன், முதற்பக்கத்தில் கலைஞர் பதில்கள் பகுதியில் நீண்ட கடிதமும் எனது பெயரைக் குறிப்பிட்டு எழுதி இருந்தார். எனக்கு மிகப்பெரிய நம்பிக்கை அளித்த பதிவாக கலைஞரின் கடிதத்தைப் பார்த்தேன்.*

*அதையெல்லாம்விட, அவரின் கவனத்துக்கு எனது பெயர் செல்லும் ஒவ்வொரு முறையும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவேன். ஏனென்றால், ஒவ்வொரு நாள் பொழுதும் எத்தனையோ பெயர்களை நினைவுகளைக் கடக்கின்ற அவருக்கு, ‘ராமசாமி’ என்கிற பெயர் ஒருகணம் திரும்பிப் பார்க்க வைக்கும். அதில் பேராசிரியர் ராமசாமி என்கிறபோது, அது நானாக இருப்பேன் என்பதை அவர் அறிவார் அல்லவா? அதுவே நிறைவுதரும் பேறுதான்.*

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

*....பகிர்வார்கள்*

## அறிவியல் மனப்பான்மையை வளர்ப்போம்!

‘**கோ**மியம் உடலுக்கு நல்லது’ என மதவாதி போல பிரச்சாரம் செய்கிறார், ஐ.ஐ.டி. இயக்குநர். அறிவியல் அறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறிய $E = MC^2$ என்பது தவறு $E = MC$–தான் என்கிறார், ஒரு தலைமறைவான சாமியார். ‘பசுமாடு மூச்சு இழுக்கும் பொழுதும், மூச்சை விடும் பொழுதும் ஆக்ஸிஜன் வாயுதான் உள்ளேயும் சென்று, வெளியேயும் வருகிறது’ என்று உத்தரப் பிரதேசத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரே கூறுகிறார். ‘மயில்கள், ஆண்–பெண் சேர்க்கையில்லாமல் இனப்பெருக்கம் செய்கின்றன’ என்று ராஜஸ்தானில் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன்பு கூறினார்.

‘சார்லஸ் டார்வினின் இயற்கைப் பரிணாமக் கோட்பாடு தவறு’ என்று ஒன்றிய இணை அமைச்சராக இருந்த ஒருவர் கூறினார். இதற்கெல்லாம் மேலாக, ‘புராண காலத்திலேயே பிளாஸ்டிக் சர்ஜரி இருந்தது’ என்று நாட்டின் பிரதமரே அறிவியல் மாநாட்டில் பேசி அதிரச் செய்தார். இப்படிக் கடந்த 11 ஆண்டுகளாகவே பா.ஜ.க. ஆட்சியில் அறிவியலுக்கு எதிராகப் பரப்பப்பட்ட செய்திகள் ஒவ்வொன்றும் தனிரகம். இத்தகைய மடமைத்தனங்களுக்கு எதிராக, அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டியது, அவசியமான பணி. அந்தப் பணியைப் பொறுப்போடு செய்திருக்கிறது, திராவிடர் கழகம்.

சென்னை, பெரியார் திடலில் உள்ள எம்.ஆர்.இராதா மன்றத்தில் 6.2.2025 அன்று நடைபெற்ற பெரியார் வாசகர் வட்ட நிகழ்ச்சியில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின், ‘மாணவர்களும் அறிவியல் மனப்பான்மையும்’, ‘அறிஞர்கள் பார்வையில் ஜோதிடம்’, ‘The Necessity of Scientific Temper’ நூல்களும், மயில்சாமி அண்ணாதுரையின் ‘பெரியாரும் அறிவியலும்’, கே.பிரம்மச்சாரியின் ‘மதமும் விஞ்ஞானமும்’, மா.சிங்காரவேலரின் ‘விஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்’ (பாகம் 1, 2) ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அறிவியல் மனப்பான்மையை, மக்கள் மத்தியில் வளர்க்கக்கூடிய ஆற்றல்மிக்க இந்நூல்களை வாங்கிப் படியுங்கள், பரப்புங்கள்...

## :ப்ளாஷ்பேக்



### ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்து அறப்போர்!



சௌ.ஆரோக்கியராசு

1991-ஆம் ஆண்டு கழக ஆட்சியை, குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனும் பிரதமர் சந்திரசேகரும் இணைந்து, ஆளுநர் பர்னாலா அவர்களின் எதிர்ப்பையும் மீறி கலைத்தனர். இந்த ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்து, பம்மல் இரட்டைப் பிள்ளையார் கோயில் அருகில், பம்மல் நகர இளைஞர் அணிச் செயலாளராக இருந்த எனது தலைமையில், ஆட்சி கலைக்கப்பட்ட மறுநாளே, ‘உண்ணா நோன்பு’ அறப்போராட்டத்தை முன்னெடுத்து நடத்தினேன். இக்கூட்டத்தை அன்றைய மாநில இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் பாசத்தளபதி அவர்கள் தொடங்கி வைத்தது, நெஞ்சம் மறவாத நிகழ்வு. அப்போது அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**– சௌ.ஆரோக்கியராசு,**
**தலைவர், தாம்பரம் மாநகரத் தொழிலாளர் அணி, தாம்பரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### மீண்டும் அண்ணா பொதுச்செயலாளர்!

1960-இல் தி.மு.க. தலைமைக் கழகத்திற்கு தேர்தல் நடந்த போது, பொதுச்செயலாளர் பதவிக்கு கே.ஏ.மதியழகனை முன்னிறுத்தினார் சம்பத். தென்னரசுவைத் தயார்படுத்தினார் கலைஞர். இதற்கு சுமுகமாகத் தீர்வு காணும் விதமாக, மீண்டும் அண்ணாவே பொதுச்செயலாளர் ஆவதென்று முடிவெடுத்தார். சம்பத் முன்மொழிய, கலைஞர் வழிமொழிய அண்ணா பொதுச் செயலாளர் ஆனார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

744

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131